**சுருக்கம்**

பள்ளிக் கல்வி - பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி - 2005-2006ஆம் ஆண்டிற்கான பகுதி –II திட்டம் - மகளிர் எழுத்தறிவில் பின்தங்கிய 15 மாவட்டங்களில் சமுதாயப் பங்கேற்புடன் எழுத்தறிவு மேம்பாட்டிற்கான திட்டம் செயல்படுத்துதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி (சி1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 66
நாள் 16.5.2005

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.142, பள்ளிக் கல்வி (சி1)த் துறை நாள் 21.10.2004.

2. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரின் கடிதங்கள் ந.க.எண். 2894/பி1/2003, நாள் 7.1.2005 மற்றும் 4.4.2005.

---------

**ஆணை**

தமிழ்நாட்டில் "அறிவொளி இயக்கம்" என்ற பெயரில் முழு எழுத்தறிவு இயக்கம் மற்றும் தொடர் கல்வித் திட்டம் ஆகியவை நிறைவுற்று மூன்றாம் கட்டமாக வளர்கல்வித் திட்டம் 1998இல் தொடங்கப்பட்டு தற்சமயம் 27 மாவட்டங்களில் மத்திய அரசு முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆயினும் குறிப்பாக மகளிர் எழுத்தறிவு விகிதம் குறைவாக உள்ள மாவட்டங்களான தருமபுரி, கிருஷ்ணகிரி, (ஒருங்கிணைந்த தர்மபுரி மாவட்டம்) விழுப்புரம், பெரம்பலூர், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய 6 மாவட்டங்களில் மகளிர் எழுத்தறிவிற்கான சிறப்பு இயக்கம் சமுதாயப் பங்கேற்புடன் 2004-05ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின் கீழ் ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மதிப்பில் 100% மாநில அரசு நிதியில் செயல்படுத்த பார்வை 1-இல் படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டது.

2. மகளிர் எழுத்தறிவிற்கான சிறப்பு இயக்ககத்தை மேலும் விரிவுபடுத்த 2005-2006ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்

கீழ் 15 மாவட்டங்களில் மகளிர் எழுத்தறிவில் பின்தங்கிய 43 வட்டாரங்களில் ரூ.43 இலட்சம் செலவில் சமுதாயப் பங்கேற்புடன் 100% மாநில அரசு நிதியில் நடைமுறைப்படுத்த பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநருக்கு அனுமதியும் மற்றும் இச்செலவிற்கு ரூ.43,00,000/- (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பும் அளித்து அரசு ஆணையிடுகிறது.

3. இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களின் பெயர், வட்டாரங்கள் மற்றும் மையங்களின் எண்ணிக்கை பின்வருமாறு :-

| வ. எண். | மாவட்டம் | வட்டாரங்களின் எண்ணிக்கை | மையங்களின் எண்ணிக்கை | தொகை ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | புதுக்கோட்டை | 4 | 200 | 4,00,000/- |
| 2 | கடலூர் | 3 | 150 | 3,00,000/- |
| 3 | திண்டுக்கல் | 7 | 350 | 7,00,000/- |
| 4 | திருவண்ணாமலை | 5 | 250 | 5,00,000/- |
| 5. | நீலகிரி | 1 | 50 | 1,00,000/- |
| 6 | நாமக்கல் | 3 | 150 | 3,00,000/- |
| 7 | கரூர் | 4 | 200 | 4,00,000/- |
| 8 | வேலூர் | 1 | 50 | 1,00,000/- |
| 9 | விருதுநகர் | 3 | 150 | 3,00,000/- |
| 10 | திருநெல்வேலி | 4 | 200 | 4,00,000/- |
| 11 | மதுரை | 2 | 100 | 2,00,000/- |
| 12 | திருச்சிராப்பள்ளி | 1 | 50 | 1,00,000/- |
| 13 | திருவள்ளூர் | 3 | 150 | 3,00,000/- |
| 14 | காஞ்சிபுரம் | 1 | 50 | 1,00,000/- |
| 15 | தேனி | 1 | 50 | 1,00,000/- |
| | மொத்தம் | 43 | 2150 | 43,00,000/- |

மாவட்ட மகளிர் வளர்கல்வி மைய உதவிப் பொறுப்பாளர்களே இத்திட்டத்தில் தன்னார்வலராகப் பணியாற்றுவர். இத்திட்டம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கொண்ட எழுத்தறிவு குழுமத்தால் நடைமுறைப்படுத்தப்படும்.

**திட்டத்தின் அம்சங்கள்**

1. தெரிந்தெடுக்கப்பட்ட மகளிர் எழுத்தறிவில் பின்தங்கியுள்ள 43 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் மேற்கூறியவாறு தெரிந்தெடுக்கப்பட்ட 50 வளர்கல்வி மையங்களில் மகளிர்க்கான இச்சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.

2. தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு வட்டாரத்திலும் 50 மகளிர் வளர்கல்வி மைய உதவிப் பொறுப்பாளர்களே இத்திட்டத்தில் தன்னார்வலர்களாகப் பணியாற்றுவார்கள்.

3. வளர்கல்வி மையங்களில் உள்ள வசதிகளை இத்திட்ட மேம்பாட்டிற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டாக முதல்நூல்கள், கரும்பலகை வசதி முதலானவை.

4. பிறகற்றல் பொருட்களுக்காக கற்போர் ஒருவருக்கு இணைப்பு-I-இல் உள்ளவாறு ரூ.45/-அனுமதிக்கப்படும்.

5. மையம் ஒன்றிற்கு அனுமதிக்கப்படும் செலவு குறித்த விவரம் இணைப்பு-II இல் கொடுக்கப்பட்டுள்ளது.

6. சமுதாய பங்கேற்பு குறித்து ஆலோசனைகள் இணைப்பு-IIIஇல் உள்ளன.

7. ஒரு மையத்திற்கு 20 கற்போர் வீதம் ஒரு வட்டாரத்தில் 50 மையங்களில் 6 மாதங்களில் பயன்பெறும் மகளிர் எண்ணிக்கை 1000. ஆக 43 வட்டாரங்களில் எழுத்தறிவு பெறும் மகளிரின் எண்ணிக்கை மொத்தம் 43,000/-.

4. பத்தி 2-இல் இத்திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.43 இலட்சத்தை சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை (தெற்கு) அலுவலகத்தில் இருந்து முன்பணமாகப் பெற்று மேலே பத்தி 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள 15 மாவட்ட ஆட்சியர்களுக்கு அந்தந்த மாவட்டங்களுக்கு எதிரே தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வழங்க பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டம் செயல்படுத்திய பிறகு ஒரு மாத காலத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் அதற்கான வரவு செலவு கணக்குகளை உரிய பற்றுச் சீட்டுகளுடன் பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்துமாறு பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 1இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக் கல்வி- 04. முதியோர் கல்வி- 200- ஏனைய முதியோர் கல்வித் திட்டங்கள்- பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்- II.மாநிலத் திட்டம்- JJ.முறைசாரா கல்விக்கான மாநிலத் திட்டம்- 01.சம்பளங்கள்- 09.மதிப்பூதியம் (த.தொ.2202-04-200-JJ-0196)

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண். 33369/கல்வி-II / 2005 நாள் 9.5.2005-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கிரிஜா வைத்தியநாதன்
அரசு செயலாளர்.

பெறுநர்

பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர், சென்னை- 6.

மாவட்ட ஆட்சியர்கள், புதுக்கோட்டை / கடலூர்/ திண்டுக்கல் / திருவண்ணாமலை / நீலகிரி / நாமக்கல்/ கரூர்/ வேலூர்/ விருதுநகர்/ திருநெல்வேலி/ மதுரை/ திருச்சிராப்பள்ளி / திருவள்ளூர் / காஞ்சிபுரம் / தேனி

சிறப்பு ஆணையர், கருவூல கணக்குத் துறை, பனகல் கட்டிடம், சென்னை-15

மாநிலக் கணக்காயர், சென்னை-18.

சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.

மாவட்ட கருவூல அலுவலர்கள், புதுக்கோட்டை / கடலூர்/ திண்டுக்கல் / திருவண்ணாமலை / நீலகிரி / நாமக்கல்/ கரூர்/ வேலூர்/ விருதுநகர்/ திருநெல்வேலி/ மதுரை/ திருச்சிராப்பள்ளி / திருவள்ளூர் / காஞ்சிபுரம் / தேனி

நகல்

நிதித் துறை, சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - I

கற்றல் பொருட்களுக்கான விவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | நோட்டுப் புத்தகங்கள் (2) | - | ரூ. | 20.00 |
| 2. | கற்பலகை | - | ரூ | 15.00 |
| 3. | பலப்பம் (1பெட்டி) | - | ரூ. | 5.00 |
| 4. | பென்சில்கள் - 2 | - | ரூ. | 4.00 |
| 5. | இரப்பர் | - | ரூ. | 1.00 |
| | மொத்தம் | - | ரூ. | 45.00 |

கிரிஜா வைத்தியநாதன்
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு - II

I. ஒரு மையத்திற்கு அனுமதிக்கப்பட்ட செலவு விவரம் :-

| | | | |
|---|---|---|---|
| 1 | கற்பிப்பு பொருட்கள் ரூ.45/- x 20(கற்போர்) | - | ரூ.900.00 |
| 2 | கற்பிப்பாளர்களுக்கு பயிற்சி செலவு: | | |
| | அ. புத்துணர்வுப் பயிற்சி 1 நாள் மற்றும் பணியிடைப்பயிற்சி மற்றும் மதிப்பீடு செய்தல், 2 நாட்கள் 3 X ரூ.60/-<br>1 பயணச் செலவு - ரூ.25.00<br>2 மதிய உணவு - ரூ.20.00<br>3 தேனீர் (இரண்டு வேளை) - ரூ 5.00<br>4 சில்லரை செலவினம் - ரூ.10.00<br>மொத்தம் - ரூ.60.00<br><br>ஆ. ஒரு நாள் புத்துணர்வுப் பயிற்சிக்கான கருத்தாளர்கள் மதிப்பூதியம் ரூ.150.00<br>பயிற்சி சில்லரைச் செலவு (பதிவேடு, எழுதுபொருள் மற்றும் இதர செலவினம்)- ரூ.20.00 | -<br>-<br>- | ரூ.180.00<br><br>ரூ.170.00 |
| 3. | சில்லரைச் செலவினங்கள்<br><br>(வருகைப்பதிவேடு, சாக்குக்கட்டி முதலானவை) | - | ரூ.150.00 |
| 4. | மின்சாரக் கட்டணச் செலவு மாதம் ரூ.100/- வீதம்<br><br>6 மாதங்களுக்கு ( 100/- X 6 = ) | - | ரூ.600.00 |
| | மொத்தம் | - | ரூ.2000.00 |

II. ஒரு வட்டாரத்திற்கு ஆகும் செலவு
ரூ.2000/- X 50 மையங்கள் = ரூ.1, 00,000/-

ஒரு கற்போருக்கான செலவு ரூ.2000/- =
ரூ.100/- X 20

III. 43 வட்டாரங்களுக்கு ஆகும் செலவு
= ரூ. 1, 00,000 X 43
=
ரூ.43, 00, 000/-

கிரிஜா வைத்தியநாதன்
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு III

I. கிராம அளவில் சமுதாயப் பங்கேற்பு

1. ஊராட்சிகள்/கிராம கல்விக் குழுக்கள் உள்ளூரில் வசிக்கும் 10ம்வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண்கள் தன்னார்வத் தொண்டின் அடிப்படையில் புதிதாகக் கற்போர்களுக்கு அவர் தம் கற்றலில் மைய உதவிப்பொறுப்பாளர்களுக்கு உதவலாம்.

2. 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற சுயஉதவிக் குழுவிலுள்ள பெண்கள் மற்றும் ஓய்வு பெற்ற ஆசிரியைகள் மேற்படித் திட்டத்தில் தன்னார்வலர்களாக பணியாற்றலாம்.

3. அரசுக் கட்டிடங்கள் அல்லது பள்ளிக் கட்டடங்கள் அல்லது மகளிர்சுய உதவிக்குழு கட்டிடங்கள் முதலியவற்றில் கற்போருக்கான இடவசதி செய்து தரலாம்.

4. மேற்படிக் கட்டிடங்கள் இல்லாத இடங்களில் வாடகையின்றித் தனியார் கட்டிடங்களைக் கூட கட்டிட உரிமையாளர் அனுமதியின்பேரில் பயன்படுத்தலாம்.

5. மேற்படி இடங்களுக்கு மின்சார விளக்கு வசதி செய்து தரலாம் (மின் கட்டணத்தை அரசு ஏற்கும்).

6. ஊராட்சி மன்ற படித்த பெண் உறுப்பினர்கள் கிராம அளவில் செயல்படும் மேற்படி கற்போர் மையங்களை மேற்பார்வையிடலாம்.

II வட்டார அளவில் சமுதாயப் பங்கேற்பு

7. வட்டார அளவில் வளர் கல்வித் திட்ட வட்டாரஒருங்கிணைப்பாளர்கள் பிரத்யேகமாக இத்திட்டத்தை கூடுதல் செலவு ஏதுமின்றி மேற்பார்வை செய்யலாம்.

IIIமாவட்ட அளவில் சமுதாயப் பங்கேற்பு

8. மாவட்ட எழுத்தறிவுக்குழுமம் மாவட்ட அளவில் இத்திட்டத்தை மேற்பார்வையிடும். இதனால் அரசுக்கு கூடுதல் செலவு ஏதுமில்லை.

9. மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர் (வளர்கல்வித் திட்டம்) இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் முழுபொறுப்பு ஏற்பார். இதனால் அரசுக்கு கூடுதல் செலவினம் ஏதுமில்லை.

## IV மாநில அளவில் சமுதாயப் பங்கேற்பு

10. மாநில பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம் மாநில அளவில் கூடுதல் செலவின்றி இத்திட்டத்தை மேற்பார்வையிடலாம்.

11.மாவட்டத்தில் உள்ள அரிமா சங்கம், ரோட்டரி சங்கம் முதலானவை இத்திட்டத்தை தமது சொந்த செலவிலேயே வரும் ஆண்டுகளில் செயல்படுத்தத் தூண்டலாம்.

கிரிஜா வைத்தியநாதன்
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.